පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

**பொலிஸ் ஊடகப் பிரிவு**

**POLICE MEDIA DIVISION**

**14 ஆம் மாடி, சுகுறுபாய,**

**பத்தரமுல்லை**

| | | | |
|---|---|---|---|
| දිනය திகதி Date | 26.12.2024 நேரம் 11.15 மணி | දුරකථන தொலைபேசி Telephone | 011-2887973 |
| මගේ අංකය எனது இலக்கம் My No | D/Media/out/ 1888/2024 | ඊ මේල් மின்னஞ்சல் E-mail | dir.media@police.gov.lk |

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

**போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்தும் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக - பொலிஸ் தலைமையகம்.**

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேரங்களில் வாகங்களை நிறுத்துவதற்காக சமிக்ஞை காட்டும் போது பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான மின்விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். அதனால் மின்விளக்குகளின் வெளிச்சம் வாகன ஓட்டுநர்களின் முகத்தில் படுவதால், சில சந்தர்ப்பங்களில் வாகனத்தை கையாள்வதிலும் கட்டுப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுவதுடன், விபத்துகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. மேலும், உத்தியோகத்தர்கள் ஒளி பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் அணியாதிருப்பதால் அவர்களும் விபத்துகளில் சிக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அதனால், இன்றிலிருந்து போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, இதற்கு முன்னர் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காக சமிக்ஞை காட்டும் போது, உத்தியோகத்தர்கள் வாகன சாரதிகளுக்கு தெளிவாக தெரியும் வகையில் ஒளியைப் பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் அணிந்திருத்தல் வேண்டும். மேலும் வாகனங்களை நிறுத்துவதற்காக தற்போது பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்டுள்ள சிவப்பு மின் சமிக்ஞை விளக்குகளை முடிந்தவரை பயன்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மேலும், இரவு கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் இந் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்களா, என்பதைத் தொடர்ந்தும் கண்காணிக்கமாறு தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள், பொறுப்பதிகாரிகள் மற்றும் போக்குவரத்து பொறுப்பதிகாரிகளுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.